பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 02 2025 **THURSDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோருக்கு முக்கிய பங்கு உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சிப்பணிகளில் மகளிர் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் தனியார் குழுமத்தின் உற்பத்தி ஆலையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றபின்னர் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 249 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோருக்கு முக்கிய பங்கு உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கு இன்று மாநிலங்களவையில் பதிலளித்து அவர் பேசினார்.

இளையோர் நலனை கருத்தில்கொண்டே புதிய தேசிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் பிரதமர் ஸ்ரீ பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தாய்மொழி வழிக்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏழை மக்களின் மேம்பாட்டிற்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

இதன்மூலம் 25 கோடி பேர் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சிக்கு நடுத்தர வர்க்கத்தினர் உத்வேகம் அளிப்பதாக கூறிய திரு நரேந்திர மோடி, அவர்களின் நலன்களை பாதுகாப்பதற்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<>>>>

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இந்தியர்கள் நாடு கடத்தப்படுவது வழக்கமான நடைமுறைதான் என்று வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் இதுதொடர்பாக அறிக்கை தாக்கல் செய்து அவர் பேசினார்.

ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டை சேர்ந்த குடிமக்கள் வெளிநாடுகளில் சட்டப்பூர்வமாக தங்கியிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச சட்டங்களும், நெறிமுறைகளும் வலியுறுத்துவதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2009-ஆம் ஆண்டு 734 இந்தியர்கள் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாடு கடத்தப்படுபவர்கள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக அமெரிக்க அரசுடன், மத்திய அரசு தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

இந்த அறிக்கையை வெளியுறவு அமைச்சர் மக்களவையிலும் தாக்கல் செய்து உரையாற்றினார்.

<<<<>>>>>

தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 30 இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கீழடியில் அகழாய்வுப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

<<<<>>>>>

அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சிப்பணிகளில் மகளிர் பங்களிப்பை அதிகரிப்பதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை பட்டியலிட்டார்.

இந்த திட்டங்கள் மூலம், ஆராய்ச்சிப்பணிகளில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>>

நாடு முழுவதும் 650 அஞ்சலகங்களில் வங்கி சேவைகள் வழங்கப்படுவதாக மத்திய இணையமைச்சர் திரு **Pemmasani Chandrasekar** கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில் இந்த அஞ்சலக வங்கி சேவைகள் வழங்கப்படுவதாக கூறினார்.

அஞ்சலக வங்கி சேவையின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஏழு கோடியை தாண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

24 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு **Pemmasani Chandrasekar** கூறினார்.

<<<<>>>>

திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் தொழில்பூங்காவில் தனியார் குழுமத்தின் உற்பத்தி ஆலையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

மூவாயிரத்து 800 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் நான்காயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், குற்றச்செயல்கள், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாயிகளுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று குறை கூறியுள்ளார்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது, விவசாயிகளின் பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று திமுக அறிவித்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை நிறைவேற்றாமல், விவசாயிகளுக்கு திமுக அரசு துரோகம் இழைத்துள்ளதாகவும் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<>>>>>

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டித்து மத்திய பட்ஜெட்டில் வெளியான அறிவிப்பு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

63 சதவீத நோய்கள் குடிநீரால் பரவும் நிலையில், பாதுகாக்கப்பட்ட குடிநீரை உறுதி செய்யும் இந்த திட்டத்தின்மூலம் கிராம மக்களின் ஆயுட்காலம் அதிகரிக்கும் என்று கேரளாவில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு சாமிகண்ணன் எமது சேலம் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - சாமிகண்ணன் - 26 செகண்ட்ஸ்)*

<<<<>>>>>

தமிழகத்தில் கல்வியின் தரம் குறைந்துள்ளதாக பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

விழுப்புரத்தையடுத்த தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற நிலையில்,புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் சரிபார்க்கப்பட்ட நிலையில், இதுவரை பணி நியமனம் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்ச்சி பெற்றவர்களுக்கு உடனடியாக பணிநியமன ஆணைகளை தமிழக அரசு வழங்க வேண்டும் என்றும் திரு ராமதாசு கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பிற்கான ஆய்வைகூட மாநில அரசு மேற்கொள்ளாதது ஏன் என்று தமிழக வெற்றிக்கழகத் தலைவர் திரு விஜய் வினவியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிற மாநிலங்களில் இத்தகைய ஆய்வுகள் நடத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதிலும், திமுக அரசு அலட்சியப்போக்குடன் நடந்துகொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

சமூக நீதியை வழங்குவதற்கான ஆய்வினை மேற்கொள்ளாமல் தாமதித்தால், ஆட்சியாளர்களின் பொய் வேடம் களையும் நாள் வெகுதொலைவில் இல்லை என்றும் திரு விஜய் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு நடுநிலைப்பள்ளியில் ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>>

நாகை மாவட்டத்தில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தின்கீழ் பயன்பெறாதவர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பயனடையுமாறு ஆட்சியர் திரு ஆகாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>>

மயிலாடுதுறை மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பெண்களுக்கு எதிரான இணையக்குற்றங்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

<<<<>>>>>

தூத்துக்குடியில் இரண்டு கார்களில் கடத்தப்பட்ட 450 கிலோ புகையிலைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

<<<<>>>>>

திருப்பூர் மாவட்டம் செங்கப்பள்ளி அருகே நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த இரண்டு பேரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>>

தருமபுரி குமாரசாமிபேட்டை சுப்பிரமணிய சுவாமி கோவில் தைப்பூசா திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<>>>>

தாய்லாந்திலிருந்து விமானம் மூலம் போதைப்பொருளை கடத்திவந்த சென்னையை சேர்ந்த பயணியை சென்னை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 249 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 11 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 76 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்

து, 47 புள்ளி நான்கு ஓவரில் 248 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Jos Buttler** 52 ரன் எடுத்தார்.

**Harshit Rana** அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

---------

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Manas Dhamne** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<END>>>>**